பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

20 04 2024 **SATURDAY** 12 40 **PM**

வணக்கம், ஆகாஷ்வாணி - செய்திகள்

தலைப்புச் செய்திகள்

- மக்களவைக்கு நேற்று நடைபெற்ற முதல்கட்ட தேர்தலில் அதிக அளவில் மக்கள் வாக்களித்திருப்பது மனநிறைவை அளித்திருப்பதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.
- மக்களவைத் தேர்தலில் இரண்டாம் கட்ட வாக்குப்பதிவு நடைபெறும் தொகுதிகளில் அரசியல் கட்சிகளின் பிரச்சாரம் தீவிரமடைந்துள்ளது.
- மூன்றாம் கட்டமாக தேர்தல் நடைபெறவுள்ள 94 தொகுதிகளில், வேட்புமனுக்கள் பரிசீலனை இன்று நடைபெறுகிறது.
- தமிழகத்தில் நேற்று நடைபெற்ற மக்களவை தேர்தலில் பதிவான வாக்குகள் அடங்கிய மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் வாக்கு எண்ணும் மையங்களில் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளன.
- ஐபிஎல் கிரிக்கெட் போட்டியில். ஹைதராபாத் அணி இன்று தில்லி அணியை எதிர்கொள்கிறது.

>>>>><<<<<

மக்களவைக்கு நேற்று நடைபெற்ற முதல்கட்ட தேர்தலில் அதிக அளவில் மக்கள் வாக்களித்திருப்பது மனநிறைவை அளித்திருப்பதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

மகாராஷ்ட்ர மாநிலம், **Nanded-**ல் தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்ட அவர், அதிக அளவில் மக்கள் வாக்களித்திருப்பது அனைத்து கட்சிகளும் ஜனநாயகத்தை நிலைநாட்ட மேற்கொண்ட முயற்சிக்கு கிடைத்துள்ள வெற்றியாகவே தாம் கருதுவதாக குறிப்பிட்டுள்ளார்.

>>>>><<<<<

மக்களவைத் தேர்தலுக்கான முதல்கட்ட வாக்குப்பதிவு நேற்று முடிவடைந்த நிலையில்,

இரண்டாம் கட்ட வாக்குப்பதிவு நடைபெறும் தொகுதிகளில் அரசியல் கட்சிகள் தீவிர பிரச்சாரத்தை தொடங்கியுள்ளன.

கர்நாடகா, கேரளா, குஜராத் உள்ளிட்ட 13 மாநிலங்களில் உள்ள 89 தொகுதிகளில் வரும் 26ஆம் தேதி வாக்குப்பதிவு நடைபெறவுள்ளது.

பிஜேபி மூத்த தலைவரும், பிரதமருமான திரு. நரேந்திர மோடி, இன்று நண்பகல் கர்நாடக மாநிலம், சிக்பலாபூர் மாவட்டத்தில் தனது பிரச்சாரத்தை தொடங்குகிறார்.

பின்னர், பெங்களூரு பேலஸ் மைதானத்தில் நடைபெறும் பொதுக்கூட்டத்தில் தமது கட்சி சார்பில் போட்டியிடும் ஆறு வேட்பாளர்களுக்கு ஆதரவாக வாக்கு சேகரிக்க உள்ளார்.

பிஜேபி கூட்டணியில் உள்ள மதச்சார்பற்ற ஜனதா தளமும் இந்த பிரச்சாரக் கூட்டத்தில் பங்கேற்கவுள்ளது.

முதலமைச்சர் திரு. சித்தராமையா மைசூரிலும், துணை முதலமைச்சர் திரு. டி.கே. சிவக்குமார் மாண்டியா தொகுதியிலும் பிரச்சாரம் மேற்கொள்ளவுள்ளனர்.

கேரளாவில் 20 தொகுதிகளில் இரண்டாம் கட்ட வாக்குப்பதிவு நடைபெறவுள்ளது.

இன்று, கொச்சி தொகுதியில் காங்கிரஸ் பொதுச்செயலாளர் திருமதி. பிரியங்கா காந்தி பிரச்சாரம் மேற்கொள்கிறார்.

காலையில் சாலக்குடி மற்றும் பத்தனந்திட்டாவிலும், மாலையில் திருவனந்தபுரத்திலும் அவர் பிரச்சாரம் செய்கிறார்.

மாநில முதலமைச்சர் திரு. பினராய் விஜயன், வடகரா தொகுதியில் மூன்று இடங்களில் பிரச்சாரம் மேற்கொள்கிறார்.

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் திரு. சீத்தாராம் யெச்சூரி, ஆலப்புழா, கொல்லம் உள்ளிட்ட இடங்களில் வாக்கு சேகரிக்கிறார்.

திரு. பிரகாஷ் கரத் கன்னூரிலும், திருமதி. பிருந்தா கரத் திருச்சூரிலும் பிரச்சாரம் மேற்கொள்கின்றனர்.

பிஜேபி மூத்த தலைவர் திருமதி. நிர்மலா சீதாராமன், தேசிய ஜனநாயக கூட்டணி வேட்பாளர்களுக்கு ஆதரவாக திருவனந்தபுரத்தில் பிரச்சாரம் மேற்கொள்கிறார்.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச்செயலாளர் திரு. டி. ராஜா, வயநாட்டில் வாக்கு சேகரிக்கவுள்ளார்.

இந்நிலையில், மூன்றாம் கட்டமாக அடுத்த மாதம் 7ஆம் தேதி தேர்தல் நடைபெறவுள்ள 94 தொகுதிகளில், வேட்புமனு தாக்கல் நேற்று நிறைவடைந்தது.

வேட்புமனுக்கள் இன்று பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படுகின்றன.

வேட்புமனுக்களை விலக்கிக்கொள்ள நாளை மறுநாள் கடைசி நாளாகும்.

குஜராத் மாநிலத்தில் 26 மக்களவை தொகுதிகளுக்கான வேட்புமனு தாக்கல் நேற்று முடிவடைந்த நிலையில், பிஜேபி மூத்த தலைவரும், மத்திய உள்துறை அமைச்சருமான திரு. அமித் ஷா, காந்திநகரில் தமது வேட்புமனுவை தாக்கல் செய்தார்.

காங்கிரஸ் மூத்த தலைவர் திரு. பரேஷ் தனானி, ராஜ்கோட் மக்களவை தொகுதியில் வேட்புமனுவை தாக்கல் செய்தார்.

மூன்றாம் கட்ட மக்களவை தேர்தலுடன், குஜராத் மாநிலத்தில் ஐந்து சட்டப்பேரவை தொகுதிகளுக்கான இடைத்தேர்தலும் நடைபெறுகிறது.

மக்களவை தேர்தலில் நான்காம் கட்ட வாக்குப்பதிவிற்கான வேட்புமனு தாக்கல் நேற்று தொடங்கியது.

9 மாநிலங்கள் மற்றும் ஒரு யூனியன் பிரதேசத்தில் உள்ள மொத்தம் 96 தொகுதிகளில் நான்காம் கட்ட தேர்தல், அடுத்த மாதம் 13ஆம் தேதி நடைபெறவுள்ளது.

ஆந்திரப்பிரதேச சட்டப்பேரவைக்கு 175 தொகுதிகளுக்கு நடைபெறவுள்ள தேர்தலுக்கான வேட்புமனு தாக்கலும் நேற்று தொடங்கியுள்ளது.

ஒடிசா மாநிலத்தில் 28 தொகுதிகளிலும் வேட்புமனு தாக்கல் நேற்று தொடங்கியது.

>>>>><<<<<

தமிழகத்தில் நேற்று நடைபெற்ற மக்களவை தேர்தலில் பதிவான வாக்குகள் அடங்கிய மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் அந்தந்த மாவட்டங்களில் உள்ள மையங்களில் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளன.

சென்னையில் உள்ள 3 மக்களவைத் தொகுதிகளிலும் நேற்று பதிவான வாக்குகள் அடங்கிய மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் சென்னை ராணிமேரி கல்லூரி மற்றும் அண்ணா பல்கலைக் கழகத்தில், நான்கு அடுக்கு பாதுகாப்புடன் வைக்கப்பட்டுள்ளதாக மாவட்ட தேர்தல் அதிகாரியும், சென்னை மாநகராட்சி ஆணையருமான திரு. ஜெ. ராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

இன்று சென்னையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், போதிய அளவில் கண்காணிப்பு கேமராக்கள் பொருத்தப்பட்டு, 24 மணிநேரமும் கண்காணிக்கப்பட்டு வருவதாக கூறினார்.

(சவுண்ட் பைட் - ராதாகிருஷ்ணன் 65 செகண்ட்ஸ்)

திருச்சியில் ஜமால் முகமது கல்லூரி வாக்கு எண்ணும் மையத்தில் வாக்குப்பதிவு செய்யப்பட்ட மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் மூன்றடுக்கு பாதுகாப்புடன் வைக்கப்பட்டுள்ளன.

ஈரோடு தொகுதியில் வாக்குப்பதிவுக்கு பயன்படுத்தப்பட்ட இயந்திரங்கள் சித்தோட்டில் உள்ள அரசு பொறியியல் கல்லூரியில் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளதாக மாவட்ட தேர்தல் அலுவலரும், ஆட்சியருமான திரு. ராஜகோபால் சுன்கரா தெரிவித்தார்.

சிவகங்கை மாவட்டத்தில் பதிவான வாக்குகள் காரைக்குடி அழகப்பா அரசு பொறியியல் கல்லூரி மற்றும் அழகப்பா பாலிடெக்னிக் கல்லூரயில் பாதுகாப்புடன் வைக்கப்பட்டுள்ளதாக மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் திரு. டோங்கரே பிரவின் உமேஷ் தெரிவித்தார்.

>>>>><<<<<

இந்தியாவில் தயாரிக்கப்பட்ட பிரமோஸ் சூப்பர்சானிக் ஏவுகணையின் முதல் தொகுதி நேற்று பிலிப்பைன்ஸுக்கு வழங்கப்பட்டது.

இதுதொடர்பாக, பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனம் விடுத்துள்ள செய்திக்குறிப்பில் இந்திய விமானப் படை விமானங்கள் மூலம் இந்த ஏவுகணைகள் பிலிப்பைன்ஸிடம் நேற்று ஒப்படைக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிலிப்பைன்ஸ் நாட்டின் ராணுவ தளவாடங்கள் நவீனமயமாக்கல் திட்டத்தின் கீழ், இந்தியாவிடமிருந்து இந்த ஏவுகணைகள் கொள்முதல் செய்யப்பட்டுள்ளன.

கடந்த 2022ஆம் ஆண்டு ஜனவரி மாதம் மேற்கொள்ளப்பட்ட 375 மில்லியன் டாலர் ஒப்பந்தத்தின் அடிப்படையில், இந்த ஏவுகணைகள் வழங்கப்பட்டுள்ளன.

பிரமோஸ் ஏவகணைத் திட்டத்தை இந்தியாவின் பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பும் ரஷ்யாவின் **NPO** அமைப்பும் இணைந்து மேற்கொண்டுள்ளன.

>>>>><<<<<

மேற்காசியாவில் பதற்றத்தை தணிக்கும் வகையில் இஸ்ரேலும், ஈரானும் நடந்து கொள்ள வேண்டும் என்று அமெரிக்கா உள்ளிட்ட ஏழு நாடுகளின் வெளியுறவுத்துறை அமைச்சர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

இஸ்ரேல் மீது மீண்டும் ஏவுகணை தாக்குதல் நடத்தினால் ஈரானுக்கு எதிராக புதிய பொருளாதார தடைகள் விதிக்கப்படும் என்று இவர்கள் எச்சரித்துள்ளனர்.

இத்தாலியில் **Capri** நகரில் நேற்று நடைபெற்ற வெளியுறவுத்துறை அமைச்சர்கள் கூட்டத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டதாக இத்தாலி வெளியுறவுத்துறை அமைச்சர் திரு. **Antonio Tajani** தெரிவித்துள்ளார்.

சமீபத்திய முன்னேற்றங்களுக்கு ஏற்ப இந்த கூட்டத்தில் விவாதிக்கப்படவுள்ள விஷயங்கள் மாற்றியமைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

சிரியாவில் உள்ள ஈரான் தூதரகத்தின் மீது இஸ்ரேல் நடத்திய வான்வழி தாக்குதலில் ஈரானின் மூத்த ராணுவ அதிகாரிகள் உயிரிழந்தனர்.

இதையடுத்து, பதிலுக்கு இஸ்ரேல் நாட்டின் முக்கிய ராணுவ தளங்கள் மீது, ஈரான் ஏவுகணை மற்றும் ட்ரோன்களை கொண்டு தாக்குதல் நடத்தியது.

இதன் காரணமாக மேற்காசியாவில் பதற்ற நிலை ஏற்பட்டதை அடுத்து, அமைதியை ஏற்படுத்தும் முயற்சியில் உலக நாடுகள் ஈடுபட்டுள்ளன.

>>>>><<<<<

ஒடிசாவின் **Jhar Suguda** மாவட்டத்தில் மகாநதி ஆற்றில் படகு கவிழ்ந்து, ஏற்பட்ட விபத்தில் 7 பேர் உயிரிழந்தனர்.

மாவட்ட நிர்வாகம் மேற்கொண்ட தேடுதல் பணியின்போது, 7 உடல்கள் மீட்கப்பட்டுள்ளன.

காணாமல் போன ஒரு பெண்ணை தேடும் பணி தீவிரமாக நடைபெற்று வருகிறது.

நேற்று 54 பயணிகளுடன் லக்கான்பூர் பகுதியில் இந்தப் படகு ஆற்றில் சென்று கொண்டிருந்த போது விபத்து நேரிட்டது.

>>>>><<<<<

தென்னிந்தியாவிலும், இந்தியாவின் கிழக்குப் பகுதியிலும், அடுத்த சில நாட்களுக்கு வெப்பத்தின் தாக்கம் அதிகமாக இருக்கும் என்று இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

ஒடிசா, மேற்குவங்கம், பீகார், ஜார்கண்ட், தெலங்கானா, ஆந்திராவின் கடலோரப் பகுதிகள், தமிழகத்தின் உள்பகுதிகளில் இம்மாதம் 23ஆம் தேதிவரை வெப்பத்தின் தாக்கம் அதிகமாக காணப்படும் என்று அந்த மையம் கூறியுள்ளது.

வடமேற்கு மற்றும் வடகிழக்கு இந்தியாவில் அடுத்த 3 முதல் 4 நாட்களில் இடியுடன் கூடிய கனமழைக்கு வாய்ப்புள்ளதாகவும் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

>>>>><<<<<

ஐபிஎல் கிரிக்கெட் போட்டியில். ஹைதராபாத் அணி இன்று தில்லி அணியை எதிர்கொள்கிறது.

தில்லியில் இப்போட்டி, இரவு மணி 7.30-க்கு தொடங்குகிறது.

>>>>><<<<<

ஐஎஸ்எல் கால்பந்து போட்டியில் புவனேஷ்வரில் இன்று நடைபெறவுள்ள இரண்டாவது நாக்அவுட் சுற்றில் சென்னை அணி – கோவா அணியை எதிர்கொள்கிறது.

>>>>><<<<<